# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association
(பதிவு எண்: 237/84)

**தோழர் எம்.ஆர்.அப்பன் இல்லம்**
எண்.46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005
28441286 / 28440938 / 28443601 e-mail: tngeastatecenter@gmail.com / web: www.tngea.org

மாநிலத் தலைவர்
**மு.அன்பரசு**

பொதுச் செயலாளர்
**ஆ.செல்வம்**

மாநில துணைத் தலைவர்கள்
**மொ.ஞானத்தம்பி**
**ஆ.பெரியசாமி**
**கோ.பழனியம்மாள்**
**சி.எஸ்.கிறிஸ்டோபர்**
**சி.பரமேஸ்வரி**
**மு.செல்வராணி**

மாநிலப் பொருளாளர்
**மு.பாஸ்கரன்**

துணை பொதுச்செயலாளர்கள்
**இரா.மங்களபாண்டியன்**
**என்.வெங்கடேசன்**
**மு.சீனிவாசன்**
**தெ.வாசுகி**

மாநிலச் செயலாளர்கள்
**சா.டானியல் ஜெயசிங்**
**உ.சுமதி**
**ச.ஹேமலதா**
**ஆ.அம்சராஜ்**
**சா.கோதண்டபாணி**
**அ.குபேரன்**

கடித எண்..26/2022 நாள்..21.02.2022

பெறுநர்

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள்**
தலைமைச் செயலகம்,
சென்னை-600009

மதிப்பிற்குரிய ஐயா,

வணக்கம்.

பொருள் : அரசு ஊழியர் புதிய மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தை (NIHS) 01.07.2021 முதல் புதுப்பித்து அரசாணை வெளியிட்டுள்ளது - குறைபாடுகளை களைய வேண்டுதல் -தொடர்பாக

பார்வை :
1. அரசாணை எண்.57, நிதித்துறை, நாள்.26.02.2021
2. அரசாணை எண்.160, நிதித்துறை, நாள்.29.06.2021
3. அரசு கூடுதல் தலைமைச் செயலாளர், நிதித்துறை கடித எண்.41008எ, பென்சன்/2020-3, நாள்.12.07.2021
4. ஆணையர், கருவூலம் மற்றும் கணக்குத்துறை கடித எண். 34074/புமகதி1/2021, நாள்.05.10.2021

---

பார்வையில் கண்ட அரசாணைகளின்படி தமிழ்நாட்டில் உள்ள அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் பயன் பெறும் வகையில் புதிய மருத்துவக் காப்பீடு திட்டம் அமல்படுத்தப்பட்டு ஒவ்வொரு நான்கு ஆண்டுகளுக்கு ஒரு முறை ஒப்பந்தம் போடப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகிறது.

கடந்த ஜூலை 2021 முதல் ஒவ்வொரு மாதமும் ரூ.180லிருந்து ரூ.300 ஆக உயர்த்தி ஒவ்வொரு அரசு ஊழியர், ஆசிரியர்களிடமும் பிடித்தம் செய்யப்பட்டு வருகிறது.

இக்காப்பீட்டின் நோக்கம் மாத ஊதியம் பெறும் அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் திடீரென ஏற்படும் நோய்களுக்கு மருத்துவ செலவை திரும்ப பெறுவதற்கான அரசின் மிக சிறந்த திட்டமாக இருக்கிறது.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
Tamilnadu Government Employees' Association
பதிவு எண் 237/84
தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்
எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை - 600 005.
தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601




இருப்பினும் இத்திட்டத்தினை அரசே ஏற்று நடத்திட வேண்டுமென எங்கள் சங்கம் தொடர்ந்து அரசிடம் கோரிக்கை வைத்து வருகிறோம் என்பதையும் தங்களின் கனிவான பார்வைக்கு கொண்டு வருகிறோம்.

ஆனால் தமிழக அரசின் உயர்ந்த நோக்கத்தை சீர்குலைக்கும் விதமாக தனியார் மருத்துவமனைகள் அரசாணையை முழுமையாக ஏற்று அமல்படுத்தப்படுவதில்லை. உதாரணமாக பணமில்லா சிகிச்சை என்பதை உத்திரவாதப்படுத்தப்படவேண்டும். பணம் கட்டினால் மட்டுமே சிகிச்சை என்பது பரவலாக தனியார் மருத்துவமனைகள் கொள்கையாகவே கடைபிடித்து வருகிறது.

இவ்வாறு, மிக ஆபத்தான சூழ்நிலையில் தனியார் மருத்துவனைக்கு செல்லும் அரசு ஊழியர்களின் நிலைமையை சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளும் தனியார் மருத்துவமனை நிர்வாகங்கள் முடிந்தவரை பணம் கைப்பற்றும் நோக்கத்திலேயே செயல்பட்டு வருகிறது.

மேலும், வேறு வழியின்றி நோய்வாய்ப்பட்ட ஊழியர்களின் குடும்பத்தினர் அக்கம் பக்கத்தில் கடன் பெற்று உயிரை காப்பாற்றினால் போதும் என்ற நிலையில் பணத்தை செலுத்திவிடுகின்றனர். அதுபோல் ஒவ்வொரு நோய்களுக்கு ஏற்றவாறு பேக்கேஜ் எனும் வார்த்தையைப் பயன்படுத்தி பணத்தை கைப்பற்றவே தனியார் மருத்துவமனைகள் முயல்கின்றனர்.

தமிழகம் முழுவதும் இவ்வாறான நிகழ்வுகள் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. இப்பிரச்சினையில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் தொடர்ந்து, மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெறும் ஊழியர்களுக்காக மருத்துவமனைகளில் தலையிட்டு வருகிறது.

இது ஒருபுறம் என்றால் யுனைடெட் இந்தியா இன்சூரன்ஸ் நிறுவனம், இத்திட்டத்தை உள் ஒப்பந்தத்தின்படி தனியார் நிறுவனமான “MD India” மற்றும் “MEDI ASST” என்ற நிறுவனங்கள் இணைந்து தமிழகத்தை இரண்டாகப் பிரித்து இத்திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. ஊழியர்கள் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு மேற்கண்ட நிறுவனங்களிடமிருந்து முதற்கட்ட ஒப்புதல் பெறுவதற்கே பெரும் போராட்டம் நடத்த வேண்டியுள்ளது.

மேலும் குறிப்பிட்ட சிகிச்சைக்ளுக்கு குறிப்பிட்ட அளவு பணம்தான் ஒப்புதல் அளிக்கப்படும் என மேற்கண்ட தனியார் நிறுவனம் கூறிவிடுகின்றன. இது மொத்த சிகிச்சை தொகையில் தற்போது சில மாதங்களாக 50% முதல் 60% பெறுவதே பெரும் சிரமமாகவும், போராட்டமாகவும் உள்ளது. அதுவும் சங்கத்தின் கவனத்திற்கு வரும்போது ஒரு சில அரசு ஊழியர்களுக்கு மட்டுமே 70% வரை கடும் போராட்டத்திற்கு பிறகு சிகிச்சை பெறும் நோயாளிகளை 2 நாள் முதல் 3 நாள் மருதததுவமனையில் தங்கச் செய்து சிகிச்சைக்கான பணம் பெற வேண்டியுள்ளது. எனவே, தமிழக அரசு இவ்விஷயத்தில் உடனே தலையிட்டு பணமில்லா சிகிச்சைக்கான அரசாணையை அமல்படுத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

மேலும் கடந்த 2020 முதல் கோவிட்-19 பெருந்தொற்று ஏற்பட்டதிலிருந்து இத்திட்டத்தில் கோவிட்-19ஐ தமிழக அரசு சேர்த்துள்ளது. ஆனால் இரண்டு ஆண்டுகளில் ஆயிரக்கணக்கான அரசு ஊழியர்கள் இந்த பெருந்தொற்றால் பாதிக்கப்பட்டு மருத்துவமனை சிகிச்சை முடிந்து சிகிச்சைக்கான தொகை இதுநாள் வரை மீள பெறவில்லை. பல கோடி ரூபாய் காப்பீடு நிறுவனம் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு விடுவிக்காமல் இருப்பதால் ஊழியர்கள் சிகிச்சை பெறுவதில் கடும் சிரமத்திற்குள்ளாகியுள்ளனர்.

# தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம்
## Tamilnadu Government Employees' Association

பதிவு எண் 237/84

**தோழர் எம்.ஆர். அப்பன் இல்லம்**

எண் : 46, தேரடித் தெரு, திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.

தொலைபேசி எண் : 28441286, 28440938, 28443886 பேக்ஸ் : 28443601




அதேபோல் அரசு ஊழியர்கள் கோவிட்-19 பெருந்தொற்றுக்கு சிகிச்சை பார்த்த தனியார் மருத்துவமனைகளுக்கும் சிகிச்சைக்கான தொகை தமிழக அரசு விடுவிக்கப்படவில்லை. இதனால் தனியார் மருத்துவமனைகள் கோவிட்-19 பாதிக்கப்பட்ட அரசு ஊழியர்களுக்கு தொடர்ந்து சிகிச்சையளிக்க மறுத்து வருகிறன்றனர்.

சிகிச்சையளிக்கும் மருத்துவமனைகள் இத்திட்டத்தின் கீழ் இல்லாத நிலையில் சிகிச்சை முடிந்து சிகிச்சை தொகை மீளப்பெற (Re-imbursement) உரிய விதிமுறைகளின்படி அந்தந்த மாவட்டத்தின் இணை இயக்குநர் (மருததுவம் மற்றும் ஊரக நலப்பணிகள்) மூலமாக மருத்துவ நலப்பணிகள் இயக்குநரத்திற்கு அனுப்பி வந்த நிலையில் பல மாதங்களாக தொகை வழங்காமல் இருந்தது. தற்போது சம்பந்தப்பட்ட மாவட்டத்திலேயே அந்த தொகை ஒப்புதல் அளிக்க அனைத்து விண்ணப்பங்களையும் தற்பொழுது பார்வை-4ல் கண்ட கடிதத்தில் கருவூலத்துறை ஆணையர் ஏற்னவே அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் கோவிட்-19 சிகிச்சைக்கான முறையாக அனுப்பப்பட்ட விண்ணப்பங்களை அந்தந்த மாவட்ட அளவிலான குறை தீர்க்கும் குழுவில் நடவடிக்கை எடுக்க சம்பந்தப்பட்ட மாவட்டங்களுக்கு திருப்பி அனுப்பபட்டு வருகிறது. இதனால் மேலும்மேலும் தாமதம் நீட்டிக்கவே செய்யும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறோம். சிகிச்சைத்தொகை மீளப்பெற குறிப்பிட்ட காலக்கெடுவை நிர்ணயித்து ஊழியர்கள் பயன்பெற நடவடிக்கை எடுத்திடுமாறும், அரசு ஆணையின்படி பணமில்லா சிகிச்சையை உத்திரவாதப்படுத்திடவும், சிகிச்சைக்கான பேக்கேஜ் முறை ரத்து செய்து, அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் முழுத்தொகையும் பெறுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை கனிவுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தங்கள் நம்பிக்கையுள்ள

**(மு. அன்பரசு)**
மாநிலத் தலைவர்
98401 - 87508

**(ஆ.செல்வம்)**
பொதுச் செயலாளர்
94439 - 30500

நகல்

1. **மாண்புமிகு நிதி, மனிதவள மேலாண்மைத்துறை அமைச்சர் அவர்கள்**
   தலைமைச் செயலகம், சென்னை-600009

2. **மாண்புமிகு மருத்துவம்-மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள்**
   தலைமைச் செயலகம்,சென்னை-600009

3. **அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
   நிதித்துறை, தமிழ்நாடு அரசு,
   தலைமைச் செயலகம்,சென்னை-600009

4. **அரசு முதன்மைச் செயலாளர்**
   மருத்துவம்,மக்கள் நல்வாழ்வுத்துறை, தமிழ்நாடு அரசு,
   தலைமைச் செயலகம்,சென்னை-600009

5. **ஆணையாளர்,**
   கருவூலம் மற்றும் கணக்குத்துறை, நந்தனம், சென்னை-600035